
# வெற்றி முரசு

என் பத்மநாபன்



# வெற்றி முரசு

கதை

என். பத்மனாபன்.

பத்மா பப்ளிக்கேஷன்ஸ்
32/934 பாட்டுவிளாகம் தெரு,
செந்திட்டை -- திருவனந்தபுரம்.
திருவாங்கூர்.

# முகவுரை

தம்பி தங்கைகளே!

**வெற்றிமுரசு** முழக்க துடிதுடிக்கும் உங்கள் இளம் உள்ளங்களை வெகு நேரம் காத்திருக்க செய்யமாட்டேன். முழக்குங்கள் முரசை! அதன் முன் ஒரு வார்த்தை!

'நியாயம் நிலைக்கும்', மறைந்திருக்கும் குற்றவாளி என்றுவது, எப்படியாவது உலக அரங்கில் வெளியாகுவான்', 'உண்மைக்கு உலகில் இடமுண்டு' என்கிற நீதிகளை போதிக்குமே தவிர வெற்றிமுரசு, முரசு புகழ்ப்பாடப்போவதில்லை. இனி முழக்குங்கள் முரசை. பின்னர் உங்கள் எண்ணத்தை எனக்கு எழுதுங்கள்.

உதவி,

**இரணியல் சரோஜா**
சீதாராம் காட்டேஜ்,
இரணியல்
தென் திருவிதாங்கூர்.

திருவனந்தபுரம்,
2—7—1953.

# "வெற்றிமுரசு"

## மலை அடி வாரம்

ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள்......எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற கண்களுக்கு குளிர் தரும் நிறம். அந்த மாலை வெயிலில் நீல மலை அடிவாரம் இன்பத்தின் இருப்பிடமாக விளங்கியது நீண்டு வளர்ந்திருந்த அந்த ரஸ்தாவின் வலது பக்கம் நீலமலை அழகாகச் சோபித்தது!

ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தின் நிழலில் **சுந்தரம்** சோகமே உருவெடுத்தார்போல உட்கார்ந்திருந்தான். தாய் தந்தையர்களின் அன்பு அரவணைப்பில் இன்பமாக இருக்க வேண்டிய வயது......என்ன செய்வது? சுந்தரம் ஏழை **செல்வலிங்கம் பிள்ளைக்கல்லவா** பிறந்து விட்டான்! பெயர் மட்டும் செல்வலிங்கம் பிள்ளையேதவிர அவரிடம் செல்லாக்காசு கூட கிடையாது தற்போது! பசியின் கொடுமையால் பக்கத்திலே மயங்கிக்கிடக்கும் தன் தம்பிகளைத் திரும்பி பார்த்தான் சுந்தரம், துக்கம் தொண்டையை அடைத்தது! அந்தப் பக்கம் திரும்பினல் தம்பிகள்! இந்த பக்கமோ பத்து நாட்களாக ஜுரத்தால் பரிதவிக்கும் தந்தை! அவரைப் பார்த்துப்பார்த்து அழும் தாய்! சுந்தரத்திற்கு தன் ஏழ்மையின்மீது கோபம் கோபமாக வந்தது......வந்து என்ன செய்ய?

•

சுந்தரத்தின் தந்தை **ஜம்புலிங்கம்பிள்ளையின்** நிலத்தில் ஓடாக உழைக்கும் ஏழை தொழிலாளிகளில் ஒருவர்.

ஒரு மாத காலம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ கிடைக்கும் சொர்ப்ப காசு பதினைந்து நாட்கள் செலவிற்குக்கூடப் போதாது. ஜம்புலிங்கம் பிள்ளையிடம் கூலி கூட்டிக் கேட்டாலோ வேலையிருந்தே தள்ளி விடுவார். இந்த வேலையும் போய் விட்டால்......! அதை எண்ணிப் பேசாமல் இருந்து விட்டார் செல்வலிங்கம்பிள்ளை. செலவிற்குப் போதாமல் கடன் வேறு வாங்கி வந்தார் செல்வலிங்கப்பிள்ளை, அதை எப்படிதிருப்பிதரமுடியும் என்ற எண்ணம் இல்லாமலேயே! சுந்தரத்தை எப்படியோ முதல்பாரம் வரை படிக்க வைத்து விட்டார். அதன்பின் அவனைப் படிக்கவைக்க வேண்டுமானால் பீஸ் அல்லவா கட்டவேண்டும் அதற்கு அவரிடம் ஏது பணம்? அரை பீஸ் கொடுத்து படிக்கவைக்ககூடாதா என்று கேட்பீர்கள். அது தான் ஏழைகளுக்கு கிடைக்காதே பணக்காரர்களுக்கு அல்லவா அது இருக்கிறது. அந்தப் பணம் இருந்தால் இரண்டு நாள் குடும்பச் செலவிற்கு ஆகுமே. சுந்தரம் சுமடு சுமக்கும் வேலையை மேற்கொண்டான். அதிலிருந்து தினம் கிடைகும் ஒரு சில அணுக்களை அப்படியே தாயிடம் கொண்டு வந்து கொடுத்து விடுவான். அவன் சல்லிக்காசுகூட செலவு செய்யமாட்டான், அவன் என்ன பணக்கார வீட்டு பிள்ளையா பணத்தை கண்டபடி செலவு செய்ய?

கழிந்த இருபது நாட்கள் ஜம்புலிங்கத்தினிடம் உழைத்து வந்தார், செல்வலிங்கப்பிள்ளை இன்னும் பத்து தினங்கள் கழிந்தால் கூலி கிடைக்கும் என்ற மகிழ்ச்சியை மண்ணாக்கியது இந்த பாழும் ஜுரம். கழிந்த பத்து தினங்களாக ஜுரத்தால் படாதபாடு பட்டார். இந்த ஜுரம் மட்டுமே போதாதென்று இந்தசமயம் பார்த்து கடன்காரர்கள் வீட்டை.................வீட்டை என்று சொல்லக்கூட

தேவை இல்லை.........நாலு சுவரும் செத்தைக் கூரையும் இருக்கிறதே அதை வேறு ஜப்தி செய்து விட்டார்கள். அதன் பின், நீலமலை அடிவாரம்தான் அவர்களுக்குத் தஞ்சம் தந்தது.

பத்து தினங்களாக ஜுரமாக படுத்திருக்கும் தந்தைக்கு மருந்து வாங்கக்கூட காசு இல்லையே என்று வருந்தும் சுந்தரத்தைதான் நாம் முதலில் கண்டோம்.

## 2 ஈவிரக்கமற்ற ஜம்புலிங்கம்!

"அண்ணா பசிக்குதே!"

"அண்ணா ஏதாச்சியும் தாயேன்!"

தம்பிகளின் பரிதாபகரமான கதறல் சுந்தரத்தை வதைத்தது. தம்பிகளை பட்டினியிட்டு பார்க்கும்தான், ஏன் இப்பாழும் உலகில் உயிர் வாழ வேண்டும்? என்று தான் எண்ணமுடிந்தது. சல்லிக்காசில்லாத சுந்தரம் சகோதரர்களுக்கும் என்ன கொடுப்பான்? நான்கைந்து தினங்களாக அவனுக்கு சுமடு சுமக்கும் வேலைகூட கிடைக்கவில்லை. எப்படி பணம் சம்பாதிப்பது என்பதை ஆலோசித்து ஆலோசித்து மண்டையைப்போட்டு உருட்டிக் கொண்டிருந்தான் சுந்தரம்.........இவ்வளவிற்கும் அவன் தந்தை உழைத்த அந்த இருபது நாட்கள் கூலி இன்னமும் அவர்கள் வாங்கவில்லை. பின் ஏன் அதைப்போய் வாங்கக் கூடாது என்று நீங்கள் கேட்கலாம். அவனுக்கல்லவாத் தெரியும் அது கிடைப்பது எளிதல்லவென்று. கூலி கேட்கதான் சென்றால் தன்னிடமும் ஏதாவது வேலை வாங்கி விட்டு வெறும் கையுடன் அனுப்பிவிடுவார் வேறு வழி

ஒன்றும் அகப்படாததால் ஜம்புலிங்கத்தினிடம் தான்போய் பார்போம் என்று புறப்பட்டான் சுந்தரம்.

'நான் செல்வலிங்கத்தின் மகனுங்க!' சுந்தரம் நடுங்கும் குரலில் முதலியாரிடம்தான் வந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

'அதுக்கென்னடா இப்ப....உங்க அப்பன் எங்கெடா பத்து தினங்களாகக் காணும்....... இங்க எவண்டா வேலே செய்வாண்ணு நினைப்பு...' முதலியார் கடுமையாக பொழிந்து தள்ளினர்.

'இல்லீங்க....வந்து...அப்பாருக்கு சுரமுங்க...அதான் வரலீங்க.......'

'சுரமாம் சுரம்............பின்ன இவங்கல்லாம் ஏண்டா வேலைக்கு வரான்? இண்ணையிலே இருந்து அவன் வேலைக்கு வரவேண்டாமுண்ணு நான் சொன்னதாக சொல்லு'

'சாமி...நாங்க ஏழைங்.......நீங்க இப்படி சொல்லப் படாதுங்க....' சுந்தரம் கெஞ்சினன்.

"ஏழைன்ன ஆற்றிலேயோ குளத்திலேயோ விழுந்து சாகிறது தானே! என் பிராணனே ஏன் வாங்குறீங்க?"

சுந்தரத்தின் ரத்தம் கொதித்தது. ஏழைகளென்றால் என்ன வேண்டுமானாலும் சொல்லலாமோ? அவனது தன்மான உணர்ச்சி மேலாங்கியது.

'எசமான், நான் உங்க கிட்டக் கெஞ்ச வரவில்லே எங்களுக்குச் சேரவேண்டியப்பணத்தை கேட்க வந்தேன். எங்க அப்பாரு செஞ்ச இருபது நாளத்தக்கூலியையும் கேட்டு வாககிபோகத்தானுங்க நான் வந்தேன் அதல்லாம உங்க எச்சையும் பேச்சையும் கேட்கவரல்லே......!'

சுந்தரத்தின் உறுதியான பேச்சைக் கேட்ட முதலியார் அசைவற்று நின்றுவிட்டார். பதில் பேச சற்று நேரம் பிடித்தது:

"டேய்......என்னடா கூலி கேக்குதா? உங்க அப்பன் செஞ்ச வேலைக்கு கூலி வேறயா! கூலியும் கிடையாது ஒலியும் கிடையாது. மரியாதையா காம்பௌண்ட் கேட்டைவிட்டு வெளியேபோ" என்று முதலியார் கர்ஜித்தார்.

"ஏழையின் துயருணராத பணப்பேயே! நான் உனக்கிடும் பிச்சை காசாக எண்ணிக்கொள்வேன் அந்த கூலியை! உலகம் என்றும் இப்படி இராது காலம் வரும் சந்திக்கிறேன்." என்று சினிமாவில் கதாநாயகன் பேசுவது போல பேசிவிட்டு திரும்பிகூடப்பாராமல் அங்கிருந்து நடையைக் கட்டினான் சுந்தரம்.

"உன்னை இன்னமும் சில தினங்களில் கைதியாக செய்யாவிடில் நான் ஜம்புலிங்கம் அல்ல" என்று முழங்கினர் ஈவிரக்கமற்ற ஜம்புலிங்கம்!

## 3. "மர்மக்கொலை!"

மலை அடிவாரத்தை அடைந்த சுந்தரம் நடந்ததைத் தாயிடம் கூறினான்

"ஏண்டா கண்ணே, அவங்கிட்ட பேச்சு கொடுத்தே! அவன் பாவியாச்சே, இனி என்ன என்ன செய்வானோ தெரியல்லையே" என வருந்தினாள் அவன் தாய்.

'அம்மா, இனி பணம் சம்பாதிக்காமல் திரும்ப மாட்டேன்' என்று சபதம் செய்துகொண்டு புறப்பட்டுவிட்டான் தாயின் மறுப்பையும் கேளாமல் சுந்தரம்!

நேராக ரயில்வேஸ்டேஷனை அடைந்தான். ஏதாவது கூலி கிடைக்காதா என்று பார்க்கத்தான்! மாலை போய் இரவும் வந்தது. ஆனால் ஒரு கூலிகூட கிடைத்தபாடில்லை. சுந்தரம் சோர்ந்துபோய் பிளாட்பாரத்தின் ஒரு கோடியில் போய் உட்கார்ந்தான். அப்போது 'கூ...கூ...' என்று அலறிக்கொண்டு இரவு கடைசிவண்டி பிளாட்பாரத்தை அடைந்தது. அதிலிருந்து மூன்று நான்குபேர் இறங்கினார்கள். அதில் ஒருவர் கையில் பெட்டி ஒன்று இருப்பதைக் கண்டதும் சுந்தரத்தின் முகம் களிப்படைந்தது!

'ஐயா! கூலி வேணுங்களா!'

'இந்தாப்பா, இதைத்தூக்கிகிட்டு ஒரு மைல் வர என்ன கேக்கிறே?!'

'கொடுக்கிறதை வாங்கிக்கிறேனுங்க'

'அதெல்லாம் முடியாதப்பா—இங்கே வைச்சு இப்படி சொல்றது. பிறகு அங்கே போய்க்கிட்டு ஒன்றைத்தா அரையைத்தா என்கிறது அதெல்லாம் என்கிட்ட நடக்காது. எவ்வளவு வேணும் சொல்லிடு!'

'பன்னண்டணா கொடுங்க!'

'என்ன பனிரண்டணாவா? அதெல்லாம் முடியாது. எட்டணான்னா வாயா?'

'சரீங்க!' அவன் எழ்மை சம்மதிக்க செய்தது, சுந்தரம் பெட்டியையும் எடுத்துக்கொண்டு அவர் பின்னால் நடக்க ஆரம்பித்தான்!

இரவு பனிரண்டு மணி! கடும் இரவு: முன்னே செல்பவர்களை பின்னால் வருபவர்களுக்குத் தெரியாத அளவு இரவு. அந்தமனிதரது டார்ச்தான் அவர்களுக்கு வழி காட்டியது,

அவர்கள் செல்லும் பாதையின் அருகே ஒரு ஹோட்டல் தென்பட்டது. அந்த இருள் நிறைந்த சுற்றுப்பக்கத்திலே அந்த ஒரு ஹோட்டலில் மாத்திரம்தான் வெளிச்சம் தாவிக் கொண்டிருந்தது. அவர்கள் ஹோட்டல் வாசலை அடைந்தார்கள் அப்போது ஒரு இளைஞன் ஹோட்டலை விட்டு வெளியே வந்து டாக்டரிடம், (சுந்தரத்தின் முன்னே சென்று கொண்டிருந்தவர்), 'டாக்டர்ஸார், இப்போது தான் வரீங்களா? முதலாளி கூப்பிடுறார்' என்றான். 'இதோ வரனே!' என்றவாறு சுந்தரத்தினிடம் 'டேய்! பையா, இதோ ஒரு நிமிஷத்தில் வந்துடறேன்' என்று சொல்லி விட்டு உள்ளே சென்றார் டாக்டர் **ஜயசீல்!** ஐந்து நிமிடங்கள் ஆகி விட்டன. டாக்டர் வெளியே வந்தார். அவர் கால்கள் விறைத்துக்கொண்டிருந்தன பின்னும் பழையபடி முன்னேக்கி நடந்தார்கள். ஊரை அடைந்து விட்டார்கள். கோடி வீட்டை அடைந்த டாக்டர் கதவைத்திறந்து சுந்தரத்தினிடமிருந்து பெட்டியை வாங்கி உள்ளே வைத்தார்.

'டேய், எவ்வளவுடா கூலி!'

'அங்கேயே பேசிகிட்டோமே!'

'எவ்வளவுண்ணு......!'

சுந்தரத்திற்கு ஆச்சரியமாக போய் விட்டது. இதேதடா இந்த டாக்டருக்கு மறதி அதிகமோ?

'பனிரண்டணுங்க...!' துணிந்து பொய் சொன்னான். அவன் ஏழ்மை அவனை அப்படி சொல்லத்தூண்டியது.

பர்ஸைத்திறந்தார், அவர் கைகள் நடுங்குவதை சுந்தரம் கவனிக்காமல் இல்லை

'டேய், பத்து ரூபா நோட்டுக்கு மிச்சம் இருக்கா?'
'ஏழைக்கிட்ட ஏதுங்க?'

'அப்படியா......? சரி இந்தா பத்து ரூபாயை வச்சுக்கோ. யாரிடமும் நீ இந்தப் பக்கம் வந்ததாக சொல்லாதே! என்ன தெரிகிறதா?'

நடுங்கும் கையில் பத்து ரூபாயை பெற்றுக்கொண்டான். அவன் வாழ்க்கையில் இப்படி பத்து ரூபாய் நோட்டை கண்டிருப்பானா?

'மவாராசனா இருக்கணும்!'

வாழ்த்திவிட்டு, ஆழ்ந்து கிடந்த அந்த இருளிலே மெதுவாக நடந்து சென்றான் சுந்தரம். அதோ! பழைய ஹோட்டல் கொஞ்சம் முன்னால் அங்கே கிடந்த லைட் இப்போது இல்லை. ஏனோ சுந்தரம் அந்த ஹோட்டலின் முன் சில நிமிஷ நேரம் நின்றான் பின் மெதுவாக இருளைக் கிழித்துக்கொண்டு முன்னோக்கி சென்றான்.

'டக்..........!'

ஏதோ தட்டுப்பட்டு சுந்தரம் கீழே விழுந்தான்! தட்டுத்தடுமாறி எழுந்த சுந்தரத்துக்கு தான் தடுக்கி விழுந்தது ஓர் மனிதஉருவம் என்று புலப்பட்டது. அவன் மெதுவாக ''ஏய்.......யாரைய்யா இப்படிபடுத்திருப்பது?' என்று ஓசை படுத்திப்பார்த்தான். 'மது விலக்கு சட்டத்தை மீறி யாராவது........' அப்படித்தான் நினைத்தான் சுந்தரம். இருந்தும் பயமாக போய்விட்டது, அவன் மூச்சு வருகிறதா பார்க்க அந்த உருவத்தைத் தடவிப்பார்த்தான். முதலில் கைபட்ட இடம் அவ்வுருவத்தின் கை! அதிலே ஒரு டார்ச்! சுந்தரம் டார்ச்சின் விசையை அமுத்தினான். அப்போது இருள் மறைந்து அவ்வுருவம் கண்ணுக்கு புலப்பட்டது. அவன் அவ்வுருவத்தை உற்றுப்பார்த்தான்.

'ஆ!' என்றலறி பின்வாங்கிவிட்டான்.

ரத்தம்!........அவ்வுருவத்தின் நெஞ்சிலே ஒரு கத்தி குத்தி இறக்கப்பட்டிருந்தது..................அவனிடம் சுமடு கொடுத்து ஹோட்டலில் நுழைந்த அதே டாக்டர் ஜயசீலன்தான் அங்கே பிணமாகக்கிடந்திருந்தார். இதே தடா? ஆச்சரியம்! ஊருக்குள் தன்னுடன் நுழைந்து தனக்குக்கூலி கொடுத்து அனுப்பிய அதே டாக்டர் இதோ கொலையுண்டு கிடக்கிறார் ஆனல் அங்கே கருப்பு கோட்டும் பேண்டும் அணிந்திருந்த டாக்டர் இங்கே லங்கோட்டையும் ஷர்ட்டையும் தவிர உடை எதுவுமின்றி குத்தப்பட்டு இறந்து கிடக்கிறார்! ஒரு பயங்கர நிகழ்ச்சி அவன் மனக்கண் முன் நின்றது.

'**மர்மக்கொலை!**' என்று அவன் வாய் முணுமுணுத்தது!

## 4. அந்தக்கடிதம்.

இறந்து கிடந்த டாக்டர் அணிந்திருந்து வாயில் ஷர்ட்டின் ஜேப்பில் ஏதோ ஒரு கடிதம் கிடப்பது சுந்தரத்தின் கண்களுக்கு தென்பட்டது. கூடவே என்னதான் இருக்கிறது என்று பார்ப்போமே என்ற ஆவலும் பிறந்தது. ஜேபியில் இருந்த கடிதத்தை எடுத்து டார்ச் வெளிச்சத்தில் பார்த்தான். அது ஒரு பெண்மணி எழுதிய கடிதம். சுந்தரம் அதை வாசிக்க ஆரம்பித்தான்.

வஞ்சியூர்
2—2—1950.

அன்புள்ள கணவனுக்குச் சாரதா எழுதுவது:

இங்கே உங்கள் பெரிய தந்தை மகன் **வடிவேலுவின்** தொல்லை சகிக்கமுடியவில்லை. அவனை மணக்காது, நான் தங்களை மணந்ததால் வடிவேலு பொறாமையால் ஆடுகிறான்! 'உங்களை வாழவிடமாட்டேன்' என்று அவன் நம் கலியாணத்தின்போது சபதம் எடுத்துகொண்ட காட்சி என் கண்முன்னே அடிக்கடி தோன்றுகிறது நீங்கள் இங்கே இருக்கும்வரை அவன் சற்று அடங்கி இருந்தான். இப்போது நீங்களும் சென்னைக்கு மருந்து சாமான்கள் வாங்கிவர சென்றுவிட்டீர்கள். அவன் தன் வேலையையும் காண்பிக்க ஆரம்பித்து விட்டான். அவன் தந்தை ஐம்புலிங்கம் வேறு அவனுக்கு உதவியாக இருக்கிறார். எதற்கும் நீங்கள் உடனே புறப்பட்டு வருவது நல்லது.

இப்படிக்கு
உங்களை விரைவில் எதிர்பார்க்கும்
மனைவி **சாரதா**
22-ராம் நம்பர் வீடு, வஞ்சியூர்.

(4-ராம்தியதி இரவு 12 மணி வண்டிக்கு வருவதாக எழுதியுள்ளேன்.)

ஜயசீலன்.

அன்றுதான் நாலாம்தியதி என்பது கடிதத்தை படித்துமுடித்த சுந்தரத்திற்கு நினைவுவந்தது. தான் இருக்கும் வஞ்சியூரில் இருந்து சென்னைக்கு எழுதபட்ட கடிதம் என்பது சுந்தரத்திற்கு புலப்பட்டது.

'அப்பொழுது ஊரினுள் என்னுடன் வந்தவன் வடிவேலுவாகத்தான் இருக்கவேண்டும்' என்று சுந்தரம் முணுமுணுத்தான். திடீர் என்று அந்த ஹோட்டல் நினைவு வந்தது சுந்தரத்திற்கு! இந்தக்கொலைக்கும் அந்த ஹோட்டலுக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக சுந்தரம் நினைத்தான்.

சுந்தரம் நினைத்தது சரிதான். முதலாளி கூப்பிடுவதாக உள்ளே நுழைந்தாரல்லவா டாக்டர். அன்று இரவு டாக்டர் வரும்விஷயத்தை அறிந்த வடிவேலு ஹோட்டல் முதலாளியின் உதவியுடன் காப்பியில் மயக்கமருந்து சேர்த்து டாக்டரைக் குடிக்க செய்தான்! பின் மயக்கமுற்ற டாக்டரது கோட்டையும் பேண்டையும் தான் அணிந்து வெளியே வந்து ஊரைநோக்கி நடந்தான். சுந்தரம் டாக்டர் தான் என்று பின்தொடர்ந்திருக்கிறான். இங்கே வடிவேலுவின் உதவியால் **முனிசாமி** என்பவன் டாக்டரை குத்தி ரஸ்தாவில் போட்டுவிட்டு சென்றுவிட்டான். மோசக்காரர்களின் சதிதான் இது.

சுந்தரமும் இப்படித்தான் நடந்திருக்கவேண்டுமென்று எண்ணினன். உடனே பிணத்தை ரஸ்தாவின் அருகே ஒரு புதருக்குள் மறைத்து வைத்துவிட்டு ஊரை நோக்கி நடந்தான். ஊரில் 22-ாம் நம்பர் வீட்டை கண்டுபிடித்து அதன் வாசலைத் தட்டினன். ஒரு பெண்மணி கதவை திறந்தாள்,

'அம்மா, நீங்கள்தானே சாரதா?'

'ஆம். என்ன வேண்டும்?'

சுந்தரம் நடந்தவைகளை கூறி அந்தக்கடிதத்தைக் கொடுத்தான்,

'பாவி என் வாழ்வை பாழ்படுத்திவிட்டானே!' என்றலறினாள் சாரதா!

'அம்மா, கவலைப்பட்டு பிரயோசனம் இல்லை. அவன் இங்கு வரமாட்டான் என்று என்ன நிச்சயம்? அதனால் நீங்கள்......'

'ஆம், நான் இங்கிருந்து போக வேண்டியதுதான். ஆனால் எங்கே போவது?... ...!'

'அம்மா, நாங்கள் ஏழைகள். நீலமலை குகையில் வசிக்கிறோம் அங்கே வருகிறீர்களென்றால்......'

'அதுதான் மறைந்திருக்க நல்ல இடம். இதோ வந்துவிட்டேன்' என்றவாறு உள்ளே சென்ற சாரதா ஒரு சிறு தோல்பெட்டியுடன் வெளியே வந்தாள். வீட்டைப் பூட்டிய பின் சுந்தரத்துடன் நீலமலைக் குகையை நோக்கி நடந்தாள். சுந்தரம் பழைய ரஸ்தாவழி போகாமல் குறுக்கு வழியாக நடந்தான்.

## 5 சுந்தரம் கைது!

விபரங்கள் அறிந்த சுந்தரத்தின் தாய் சாரதாவை அன்புடன் வரவேற்று ஆறுதல் சொன்னாள். செல்லம்மாவின் (சுந்தரத்தின் தாயின் பெயர்) அன்பைகண்ட சாரதாவுக்கு தன் கணவனின் அன்பு நினைவுவந்தது. 'கோ' என கதறி அழுதுவிட்டாள்.

'சுந்தரம்... அவரது உடலையாவது எனக்குக் காட்டுவாயா?'

'அம்மா, நீங்கள் இந்த இரவு வேளையிலே அங்கே வருவது உங்களுக்கு ஆபத்து.... அப்படியானால் நான்

மட்டும் சென்று உங்கள் கணவரது உடலை இங்கே கொண்டு வருகிறேன்!'

'சுந்தரம் உன் உதவியை என்றும் மறக்க மாட்டேன்'

சுந்தரம் தாயிடமும் சாரதாவிடமும் விடை பெற்றுக் கொண்டு டாக்டர் பிணமாக கிடந்த இடத்தைநோக்கி நடந்தான். சுமார் பதினைந்து நிமிஷங்களில் புதரை அடைந்து அவரது உடலை வெளியே இழுத்துப்போட்டான். பின் அவரது நெஞ்சில் இருந்த கத்தியை உருவி எடுத்தான். மிக கஷ்டப்பட்டு ஜயசீலரது உடலை தன் தோள்மேல் போட்டுக்கொண்டு வலது கையிலே கத்தியுடன் எழவும் 'டேய், அங்கே என்னடா?' என்ற இரவு பாராகாக்கும் போலீஸ்காரன் ஒருவன் அதட்டல் கேட்கவும் சரியாக இருந்தது. அடுத்த நிமிஷம் அந்த இடத்தை வெளிச்சப் படுத்தியது போலீஸ்காரனது டார்ச்!

'கொலை!' போலீஸ்காரன் அலறியே விட்டான்.

அடுத்த நிமிஷம் '**சுந்தரம் கைது**' செய்யப்பட்டான் சுந்தரம் எவ்வளவோ உண்மையைச்சொல்லி கதறி அழுது பார்த்தான். அனால் அதெல்லாம் உருண்டோடி மறையும் பணத்தைப்போல வீணாயின!

## 6. பத்து வருட தண்டனை

மறுதினம் சுந்தரம் கைதான செய்தி ஊரெல்லாம் அல்லோலப்பட்டது. இரவு முழுவதும் சுந்தரத்தை எதிர் பார்த்து எதிர்பார்த்துஏமாந்துபோன சாரதாவுக்கும் மற்ற வர்களுக்கும் விடிந்தபின்தான் விஷயம் தெரிய வந்தது.

சாரதா சுந்தரத்தின் தாய் தந்தையர்களுக்கு சமாதானம் சொல்லிவிட்டு நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டாள்!

'அம்மா சாரதா, நீங்கள் தனியாக வெளியே போகக் கூடாது. அந்தபாவி வடிவேலு ஏதாவது.........' என்று என்னவெல்லாமோ சொல்லி செல்லம்மாள் தடுத்தாள்.

'அதெல்லாம் இல்லை......அவன் என்னை இப்போது ஒன்றும் செய்யமாட்டான் அவனுக்கு முக்கியம் பணம். என்னையும் பணத்தையும் ஒரே சமயம் அவன் விரும்புவானேயின்றி என்னை மட்டும் தனியாக ஒன்றும் செய்ய மாட்டான். அதுவுமின்றி தற்போது அவனிடம் என் கணவர் கையில் இருந்த பதினையிரக் கணக்கான ரூபாய்கள் இருக்கின்றன, அது செலவாகும்வரை என்னை விட்டே வைப்பான்.' என்று கூறி புறப்பட்டு விட்டாள் சாரதா.

இதுவும் ஒரு காரணமாக இருந்தபோதும் அவளது மனவுறுதிக்குமற்றும் ஒரு காரணவும் உள்ளது. அவள் இன்று தன் கணவன் சென்ற உலகிற்கே செல்லசித்தமாக இருந்தாள். நேற்று இரவே அவள் தன் சொத்துக்களை சுந்தரத்தின் பெயருக்கு மாற்றியிருந்தாள். அதுதான் அவள் அவ்வளவு தைரியத்துடன் ஸ்டேஷனுக்குச் சென்றுள்.

ஸ்டேஷனை அடைந்த சாரதா இன்ஸ்பெக்டரிடம் உண்மையில் நடந்தவற்றைக் கூறினுள். ஆனுல் அவரது காதில் அது ஒன்றும் ஏறவில்லை. 'ஜமீன்தார் மகன், வடிவேலு கொலைசெய்தான். அப்படித்தானே! ஹ....ஹ, என்று கூறி சிரித்தார் இன்ஸ்பெக்டர். அன்று காலை ஜமீன்தாரிடமிருந்து வந்த இரண்டாயிரத்தையும் அவர் மறக்கவில்லை. சாரதா அப்படி லஞ்சம் கொடுத்து நாட்டிற்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை.

'அம்மா, நீங்கள் போய்விடுங்கள். இல்லையானால் நீங்கள் கொலை குற்றத்திற்கு உடந்தையாக இருந்தீர்கள் என்று கைதுசெய்யப்படுவீர்கள்.'

வேறு வழியில்லாமல் சாரதா குகையை நோக்கி நடந்தாள்.

மறுநாள் விசாரணை நடந்தது. சுந்தரம் கூலியாக பத்து ரூபாய் பெற்றானே! அந்த ரூபாயே அவன் வாழ்வுக்கு வினையாக முடிந்தது. அந்த கோட்டு அவன் ஜேபியில் இருந்து எடுக்கப்பட்டு கொலைக்கு சாட்சியம் வகித்தது. விசாரணை நடந்தது. ஜம்புலிங்கத்தின் பொய் சாட்சியமும் வடிவேலுவின் வரட்டு பேச்சும் வெற்றிபெற்றன. அதன் முன்னே சுந்தரத்தின் உண்மையின் கதறல் எடுபடவில்லை.!

"சுந்தரம் என்ற இந்த இளைஞன் வறுமையால் டாக்டர் ஜயசீலரிடமிருந்து பத்து ரூபாயை எடுத்துகொண்டு அவரையே கொலை செய்து விட்டான். இதற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டுமே யானாலும் அவனது இளமையை உத்தேசித்து பத்து வருடமாகக் குறைத்துள்ளேன்." என்று தீர்ப்பளித்தார், ஜட்ஜ், ஜம்புலிங்கத்தின் இரண்டாயிரம் ரூபாயை ஜேபியில் வைத்தவாறு. ஜம்புலிங்கத்தின் முகத்திலே புன்னகைத் தவழ்ந்தது. கோர்ட்டில் வைத்து வடிவேலுவின் கண் சாரதாவைச் சந்தித்தது 'நான் சொன்னேனல்லவா? 'உன் வாழ்வை பாழ்ப்படுத்தி விடுவேன்' என்று! பார்த்தாயா?! என்று கேட்பது போலிருந்தது.

விசாரணை முடிந்ததும் துக்கமிகுதியாலும் வடிவேலுவின் பயத்தாலும் சீக்கிரமாக காரில் குகையை அடைந்து

செல்வலிங்கம் பிள்ளை முதலியவர்களுக்கு சுந்தரம் பத்து வருட தண்டனை அடைந்த விஷயத்தை கூறி ஆறுதலும் சொன்னாள்.

## 6 சுந்தரம் விடுதலை

சுமார் ஒரு வருடம் உருண்டு விட்டது. இப்போது செல்வலிங்கம்பிள்ளை குகையில் வசிக்கவில்லை சாரதாவின் விருப்பபடி அவளுக்கு உதவியாக, அவள் வீட்டிற்கே...... அவள் வீடல்லவே......சுந்தரத்தின் வீட்டிற்கே வந்து விட்டனர். வடிவேலுவின் தொல்லை சற்று குறைவு என்றுதான் சொல்லவேண்டும். 'ஒரு கொலை செய்தாகி விட்டது புண்பட்டிருக்கும் அவள் மனதை மேலும் என் புண்படுத்தவேண்டும் கொஞ்ச நாள் போகட்டுமே' என்ற நினைப்போ என்னவோ? சுந்தரத்தின் விடுதலை நாளை எண்ணி நாட்களை உருட்டினர் சாரதாவும், அவன் தாய் தந்தையர் களும்

டாக்டரின் பெட்டியில் இருந்து எடுத்த பணம் அத்தனையும் செலவாகிவிட்டது. இனி செலவிற்குப் பணம்? வடிவேலு தந்தையை நெருங்கினான். தினம் தினம் ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத்து அவர் மனம் மாத்துப் போய்விட்டது! பணம் கிடைக்காதபோது 'கொன்று விடுவேன்' என்று மிரட்டியும் பணம் வாங்க ஆரம்பித்தான் வடிவேலு! கொன்றும் விடுவான் என்று பயந்தார் ஜம்புலிங்கம். மகனது தொல்லையினால் ஜம்புலிங்கத்தின் அகக்கண்கள் திறந்தன.

'ஐயோ! இப்படிப்பட்ட மகனுக்காகவா சுந்தரத்திற்கு தண்டனை வாங்கிக் கொடுத்தோம.' என்று அடிக்கடி

எண்ண ஆரம்பித்தார். எப்படியாவது சுந்தரத்தை விடுதலை செய்யவேண்டும் என்ற எண்ணமும் பிறக்காமல் இல்லை.

வடிவேலுவின் தொல்லை ஒரு நாள் கடைசிப்படியை அடைந்தது.

'அப்பா, உங்களிடம் அடிக்கடி வந்து பணத்திற்காகக் கெஞ்சிக் கொண்டிருக்க முடியாது. இன்னும் இரண்டு தினங்களில் உங்கள் சொத்து முழுவதும் என் பெயருக்காகவேண்டும். இல்லையேல் உங்களைக் கொன்று......' வடிவேலு முடிக்காமலேயே சென்றுவிட்டான்.

ஐப்புலிங்கம் மனமிடிந்து போனார். 'அவர் புண்பட்ட உள்ளத்திற்குச் சாந்தி வேண்டுமானால் சுந்தரம் விடுதலை அடையவேண்டும்... ஆம்...அதுவும் இப்போதே!' இப்படி எண்ணினார் அவர்.

நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். உண்மையில் நடந்தவற்றைக்கூறினார். வடிவேலுவின் வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட 'ஜயசீலன்' என்று எழுதபட்டிருந்த கோட்டும் பேண்டும், வடிவேலுதான் கொலையாளி என்று தெரிவித்தன, ஹோட்டல் முதலாளின் சாட்சியம் அதை நிரூபித்தது. வடிவேலுவுக்கும் முனிசாமிக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. கொலைக்கு உடந்தையாக இருந்ததாக் கூறி ஜமீன்தாருக்கும் இரண்டுவருட தண்டனை அளிக்கபட்டது. அவர் அதற்காக வருந்தவில்லை. சந்தோஷமே அடைந்தார். '**சுந்தரம் விடுதலை**' அடைந்தான் என்ற செய்தி அவருக்குப்பெரிய சந்தோஷத்தை அளித்தது.

'அப்பா, சுந்தரம். நான் உனக்கு செய்தத் துரோகத்தை மன்னித்து அதை மறந்துவிடு! நீ மறந்ததாகச் சொன்னால் போதாது. நீ மறந்தது உண்மையானால் என் சொத்து முழுவதையும் நீ எடுத்துகொள்ளவேண்டும். உனக்கு எது இஷ்டமோ அதுபோல அவைகளைச் செய்! என்று கெஞ்சினார் ஜமீன்தார் ஜயபுலிங்கம். சுந்தரம் முதலியாரின் அன்பைக்கண்டு 'கோ' என்று அழுதுவிட்டான். சாரதாவின் வீட்டில் தன் தாய் தந்தையர்கள் இருப்பதை ஜமீன்தார் மூலம் அறிந்து சுந்தரம் சாரதாவின் வீட்டை நோக்கி நடந்தான். சாரதாவினுடையவும் சுந்தரத்தின் தாய் தந்தையர்களுடையவும் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

# "7 வெற்றி முரசு"

அதோ தெரிகிறதே அதுதான் சுந்தரம் ஜம்புலிங்கத்தின் சொத்தைக்கொண்டு நிறுவியிருக்கும் 'ஜம்புலிங்கம் ஏழைகள் விடுதி!' இன்றுதான் அதன் திறப்புவிழா. திறப்புவிழாவிற்கு எது மந்திரி வருகிருர் என்று கேட்டுவிடாதீர்கள். 'ஏழை மக்கள் அந்த கட்டிடத்தின் உள்ளே நுழைந்து பசியாற உண்ணுவதே எனக்கு அக்கட்டிடத்தின் திறப்புவிழா" என்கிருன் சுந்தரம். அதோ முரசொலி கேட்கிறது, திறப்புவிழா சமயம் நெருங்கிவிட்டது என்பதை அறிவிக்க!

டம்...டம்...டம டம டம் டம்

அது வெறும் முரசொலியா? இல்லே. '**வெற்றிமுரசு**' ஒலிக்கிறது. நியாயம் நிலக்கும் என்ற வெற்றிமுரசு ஒலிக்கிறது!

'உண்மை ஒரு நாள் வெளியாகும்" என்ற உண்மையை எடுத்துரைக்கிறது அது.

xTMK.4
44

எதிர்பாருங்கள்!!

என். பத்மனாபன் எழுதின

# சிதைந்த வாழ்வு

இன்றை சமுதாயத்தில் நடக்கும் பல ஊழல்களால் வாழ்வு சிதைந்து, துன்பக்கடலில் தத்தளித்து பலியான காதல் ஜோடிகளின் வாழ்க்கை சரித்திரம். என். பத்மனாபனின் கருத்துக்கள் பல நிறைந்த சிறந்த காதல் நவீனம்.

விவரங்களுக்கு எழுதுங்கள்
**பத்மா பப்ளிக்கேஷன்ஸ்**
32/934 பாட்டுவிளாகம்
செந்திட்டை, திருவனந்தபுரம்
(திருவிதாங்கூர்)

கல்த்தானியா பிரஸ், சாலை, திருவனந்தபுரம்.